ஒருபிள்ளைபெற்று உசைததையாளலையே
ஏழுபிள்ளைபெற்றுமல்லோ யேழைமதியானுமம்மா
மாடுமேய்த்துகஞ்சியானல் குடிப்பேனேமாதாவே
என்னைத்தான்கொல்லவேண்டா எனைப்பெற்றமாதாவே
போனதெல்லாம்போகட்டும் இருவர்பிழைத்திடுவோம்
அப்போதநல்லதங்தா ளரிவையெடுத்துரைப்பான்
ஆறுவர்கள்தன்னுயிர்க்கு அதிகமோநம்முயிர்தான்
நாமோடிப்பிழைத்தா லும் ஒருவரில்லையென்பார்கள்
தப்பிப்பிழைத்தாலும் தாயற்றபிள்ளையென்பார்
கண்டோர்சிரிப்பார்கள் காசினிவாரேசுவார்கள்
பார்த்தோர்சிரிப்பார்கள் பாரிலுள்ளோரேசுவார்கள்
வலதோர்சிரிப்பார்கள் வாயுளுள்ளோரேசுவார்கள்

வாடாயப்பாமகனே கூடபிறந்திடுவோம்
என்றுமேநல்லதங்கா ளிடைபரைத்தானழைத்து
கூடிப்பிடியுமென்ரு ளெற்றவனுர்தன்மகனே
ஓடிப்பிழையுமென்ரு ளுத்தமியாள்தன்மகனே
கொச்சையிடையெல்லாம் கூடிப்பிடித்துவந்தார்
வந்ததோர்பிள்ளைதன்னைத் தள்ளினுல்கங்கையிலே
தள்ளினபிற்பாடு தனியாகநல்லதங்காள்
பார்ப்தாருடையுடுத்திப் பத்தினியான்நல்லதங்காள்
தானுஞ்சலியாமல் தண்ணியில்போய்விழுந்தாள
அப்போதுதங்காதேவி மூன்றுபிழைபொருத்தாள
மூன்றுபிழைபொறுத்து முக்காலும்பொங்கிவிட்டாள்
அப்போதுநல்லதங்கா ளரிவையிளங்கொடியும்
தண்ணீர்தவளைப்போல் தானுய்மிதக்கலுற்ருள
பச்சைக்கிளிபோல பறக்கிருளபாழ்கிணற்றில்
அவளுடையகூந்தலது அறுபதுபாகமது
அறுபதுபாகங்கூந்த லலையுதுகங்கையிலே
இபபடியரக யிவரிருக்குமவேளையிலே
வேட்டைக்குப்போயிருந்த லிருதுளளராசனுக்கு
தோல்களதுடிக்கிறதும் துற்குறிநேருவதும்
இலானகண்களுக்கு ஈவந்தடிக்கிறதும்
ஆடுத்தொடைகளெல்லா மப்போபறந்திடுமாம்
யானையுருசேனையும் அத்தனையுந்தான்மடிந்து
குதிரைபரிவாரம் கோடிதனந்தானிறந்து
இப்படியாக யிடறுகளநேர்ந்தபின்பு
ஒற்றைநாய்தன்னுடனே உளளம்நைந்துவீடுசேர்ந்தாள்

முளியலங்காரி தன்கணவனுக்கு களள உபசரணை செய்தல்.

அப்போ முளியலகாரி மூதேவிசண்டாளி
பத்தாவுக்குபச்சரணை பைங்கிளியுஞ்செய்யலுற்ருள
ஆளனுக்குபசரணை ஆரணங்குசெய்யலுற்ருள
கெண்டிகையில்தண்ணீரும் கொண்டுவந்தாளப்நீரும்
பங்நீரால்காலலம்பிப் பட்டாலடிதுவட்டி
சரணஞ்சரணமென்று சரய்ந்தாளதிருமுடியை

பாதஞ்சரணமென்று பத்தாவைதெண்டனிட்டாள
தண்ணீர்குடியும்பத்தா தாகவிடாய்தீரும்பத்தா
வெந்நீர்குடியும்பத்தா லிடாயாற்றிக்கொளளும்பத்தா
அப்போதுநல்லதம்பி அவளுக்கேதுரைப்பான்
மூளிபலங்காரி மூதேவிக்கெடுத்துரைப்பான்
தண்ணீர்குடிப்பேனடி தர்கவிடாய்யாற்றிக்கொளவேன்
நல்லதென்னுடன்பிறந்த நல்லதங்காளுநாயகியை
காட்டிலேகண்டேன்பெண்ணே வீட்டுக்கனுப்பிவைத்தே
ஏழுபிளளோநல்லதங்கா ளிங்குவந்தாளெங்கேயென்றுன்
என்பிற்ப்புநல்லதங்கா ளிங்குவந்தாளெங்கேயடி
என்றுரைக்கநல்லதம்பி எடுத்துரைப்பாளநாயகியாள
கண்டதுகண்டீர்ப்போல் சுணவற்கெடுத்துரைப்பாள
வந்தாளிருந்தாளபத்தா வணைபபாய்போட்டேன்பத்தா
மக்களுடனேவந்த வரவைக்கண்டுநானுமப்போ
கால்கண்டநேரததில் கடுகவுலையும்வைத்தேன்
முனைமுறியாப்பச்சரிசிதனை மலைபோலநான்சமைத்தேன்
வாழைக்காய்கொய்தேன் வழுதலங்காயகாம்பரிந்தேன்
சுழைப்பலாக்காயை யிருமுளளுபோக்கடித்தேன்
கத்தரிக்காய்கொய்தேன் கருணைக்கொழுப்புவைத்தேன்
முளளிக்காய்கொய்தேன் முருங்கக்காய்கொய்தேன்
வச்சென்றகீரையொன்று பசலிவண்ணபோல்சமைத்தே
பதமுவிதக்கறியும் பாங்காணபச்சடியும்
எட்டுவிதக்கறியும் இயலானபோஜனமும்
அடுக்கடுக்காய்கறிசளன்பாகநான்சமைத்தேன்
உண்ணுடன்நான்பிரந்து உத்தமியாள்நாயகியும்
ஏழுபிள்ளைதனக்கும் இளங்கொடிபான்நாயகிக்கும்
பெரியகலமெடுத்தேன் பிள்ளைகட்குசோறுபோட்டேன்
சின்னகலமெடுத்தேன் சிற்றடிக்குசோறுபோட்டேன்
சுத்திகரியும்வைத்து சொம்புதயிர்முன்னேவைத்தேன்
அள்ளிபருப்புமிட்டு அதுகொண்டநெய்சொரிந்தேன்
உண்ணுங்களென்றுசொல்லிஉபசரணைசெய்துநின்றேன்
திண்ணுங்களென்றுசொல்லிதெருவாசல்காத்திருந்தேன்
அப்போநல்லதங்காள் அரிவையினங்கொடியும்
உண்டுபசியாறி யுறுகட்டில்வீற்றிருந்தாள்



அரிபிளவுபெற்றிடுயும் அள்ளியேதான்கொடுத்தேன்
தாம்பூலந்தரித்துதயவாகநல்லதங்காள்
சொக்கட்டாஞ்சதுரங்கந் தோகையரேதானுடி
காறறடிக்குமண்டபத்தில் காரிழையாள்வீற்றிருந்தாள்
தூக்கமவருதென்று துன்னீலங்கண்ணுளும்
பாங்பரைதானழைத்துபள்ளியரைசேடியென்றன
தாமகருங்குழலார் தாதிபாகளோடிவந்து
சொர்ணப்பொன்கட்டிலிட்டுச் சோடித்தாதாதியர்கள்
தங்கபொன்கட்டினின்மேல் தகுந்தமல்லீபூச்சொரிந்தார்
பளிங்குமாமண்டபத்தில் பாங்கியர்விரிதுகரி
கெண்டிகையும்பூமடலும் கொண்டுவந்துவைத்தார்கள்
பள்ளிகெள்ளுமென்றுசொல்லி பாலைபற்குதண்டனிட்டார்
அப்போதுநல்லதங்கா ளரிவைமுழுந்திறந்து
பஞ்சணைமெத்தைமீதுபள்ளிகொண்டாள்பார்வையரும்
சாதிமணக்கவரி சந்தணத்தாலாதிவத்தி
மேலைமனக்கவரி குங்குமத்தாலாட்டிவைத்து
வீசினர்தாதியாகள் மெல்லியர்களிருபாரும்
கவறிபறிமாறக் கட்டழகிதூங்கினாலே
தூங்கினள்மூன்றுசாமம் துன்னிலங்கண்ணுளும்
பொழுதாசரிந்ததென்று பொற்கொடியைதானெழுப்ப
தூங்கிமிகத்தெளிந்து தூரிதமுடன்நல்லதங்காள்
பொழுதுசரிந்ததென்று பொற்கொடியாள்
தூங்கிமிகத்தெளிந்து துரிதமுடன்நல்லதங்காள்
என்னமேயதாமேக்கியிளங்கொடியாளெதுசொல்வாள
நாத்திஞரோநாத்திஞரே நலமாகவெந்தனுக்கு
உண்ணக்கலமில்லையென்று உத்தமியாள்தானுரைத்தாள்
அப்போதுநான்தானும் அரிவையிளங்கொடியும்
அண்ணியரேஅண்ணியரே அண்ணனிடதேவியரே
அண்ணன்மனைபூ ஆளவந்தமகனியரே
எனக்கொருசேலையென யிருசேலைதான்கொடுத்தேன்
மூத்துவர்ணசேலையது மூன்றெடுத்துதான்கொடுத்தேன்
பச்சைவர்ணசேலையது பத்தாவேதானகொடுத்தேன
அழகுபணிகொடுத்தேன ஆபரணம்தான்கொடுத்தேன்

தங்கப்பணிகொடுத்தேன் தகுந்தபொருள்கைகொடுத்தேன்
சிலவுக்கோராயிரம்பொன் சிறப்பாகவான்கொடுத்தேன்
பாலர்விளையாட பம்பரங்கள்வான்கொடுத்தேன்
சிறுவர்விளையாடச் சிங்காரத்தேர்கொடுத்தேன்
மாமிவீடுபோவதற்கு மச்சுரதங்கேட்டாள்
ஆளண்வீடுபோவதற்கு அழகுரதங்கேட்டாள்
அத்தனையும்வான்கொடுத்தே அன்பானநாத்திபர்க்கு
கேட்டவுதல்லாங்கொடுத்தேன் கிளிமொழிநாதுக்கு
பாவைவிளங்கொடியாள் பத்தினியாள்பாரெல்லாம்
பூசைப்பாரவீதியெல்லாம்பந்தாடிவந்தார்கள்
செடிடிகெருவெல்லாம் செண்டாடிவந்தார்கள்
நீகளைத்தவருவாய்பென்றகடுசகுடமெடுத்தேன்
தங்கதுடமெடுத்துத் தண்ணீர்க்குப்போயிருந்தேன்
அப்போதுநல்லதங்காளரிவையிளங்கொடியும்
இருந்தாளெழுந்திருந்தாள இன்னவிடம்நானறியேன
போனவிடம்நானறிபேன் போயிருந்தகதவழியேன்
அப்போபந்தம்பிடித்துபந்தா பலதருவுத்தேடிவந்தேன
காடெல்லாந்தேடிவந்தேன் உடம்பெல்லாநோகுதிப்போ
ஆணழகுமண்ணு ஆளனெற்கனுகரு
ஒருபானைஜலம்வைத்துத் தருவாயோவென்கணவா
என்றுசொல்லக்கேட்டுமன்னன் இபலாகல்லதம்பி
ஆங்காரக்கோபமூடன ஆனந்வாழ்மார்பன்
மூளியலங்காரி மூதேவிசண்டாளி
இந்தமர்மமெல்லாம் எனக்குத்தெரியவரும்
என்பிறவிநல்லதங்காள எங்கேதான்போனுளிப்போ
நான்அறிவேனுன் ஆங்காரவார்த்தையெல்லாம்
உன்கர்வவித்தையெல்லாம் கண்டறிவேனிப்போது
போதுமடியிவவார்த்தை பொற்கொடியேகட்டிவையும்
போதுமடியிவவார்த்தை பொற்கொடியேகட்டிவையும்
இவ்வளவுசெய்திருந்தால் என்போருளநல்லதங்காள
கொஞ்சுவுபசாரம் கூறவந்தாயெந்தனுக்கு
களவுபசாரம் காட்டவந்தாயெந்தனுக்கு
என்பிறவிநல்லதங்காள எழுந்துபோனவழியறியேன்
என்றுசொல்லிதானெழுந்தானியலானநல்லதம்பி
அரண்மனைவிழுகட்டிம் அந்தப்புரந்தண்டி

தேரோடும்வீதி தெருவீதிதான்கடந்து
அண்டையசல்பெண்டுகளே அக்கமாரேதங்கைமாரே
எதிர்வீட்டுப்பெண்டுகளே எனைப்பெற்றதாய்மாரே
ஆடிதங்கையரே அசல்வீட்டுத்தங்கையரே
எனபிறப்புநல்லதங்கா ளிங்குவரக்கண்கிலையோ
ஏழுபிளைநல்லதங்கா இங்குவரக்காண்கிலையோ
அச்சல்விட்டுதங்கைமார்க ளரிவையெடுத்துரைப்பார்
வந்தாளேவந்தாளே மதனியார்மாளிகைக்கு
லந்தேதேபோதுமப்பா மாபாவிவாசலுக்கு
அவள பண்ணுதேகோலமெல்லாம் பண்ணினாளுனதேவி
வந்தவுடனேயவள வாசற்கதவடைத்தாள
ஒடிக்கதவடைத்து ஒருமட்டாய்மண்ணறைந்தாள
சாத்திக்கதவடைத்தாள தாளபூட்டிமண்ணறைந்தாள
ரமண்கொண்டுவந்து இருபக்கம்தானறைந்தாள
குழந்தைகுடிப்பதற்கு கூழுங்கிடையாதெனறுள
பசியதுதானதணிக்க பச்சைஜலமில்லையெனறுள்
களைகளதெளிவதற்கு கரண்டிஜலமில்லையெனறுள
செய்யாதகோலமெல்லாம் செய்துவந்தாளுனதேவி
கவிழ்ந்ததிருமுகத்தைக் கண்ணெடுத்துப்பாரேனெனறுள்
பண்ணுதகோலமெல்லாம் பண்ணினாளுனதேவி
கொனறைகளவைத்திருக்கும் கோணுகசாலைவழி
அருமைமக்களெழுவருடன ஆத்தாளும்போய்நடந்தாள
போனதோர்சேதிதனனை பேர்மனனனதானறிக்து
தங்கையும்போனவழி தானுமறியவில்லை
எனறுமேநல்லதம்பி இயலாகவேதுசொல்வான
கனனிநல்லதங்கைபைரான காட்டிலேகண்டழுதானே
வீட்டுக்குவந்ததொரு மெல்லியரேரானதியேன
ஏதேதுசெய்தாளோர் எனனுடையபெண்சாதி
மூளியலங்காரி முதேவிசண்டாளி
மருந்துதான்வைத்தர்ளோர் மாயப்பொடிபோட்டாளோ
ஏதெனவைத்தரளோ இயலாகதானினைந்து
அப்போதுநல்லதம்பி ஆணழகனேதுசெய்தான்

நல்லதம்பி நல்லதங்காளைக் காட்டில் தேடுதல்

அப்போ-ஒற்றைகாயோடேயல்லோ ஓடுகிறுன்நலலதம்பி
ஓட்டமாயோடும்போது உத்தமனுர்வீரியர்க்கு

மீசைதுடித்திடுமாம் வெகுகோபம்வந்திடுமாம்
கண்கள்சிவந்திடுமா காத்தாளம்வத்திடுமாம்
பக்கச்சதைக்கெல்லாம்டம்பரம்போல்துடிக்கும்
ஆகந்தொடைகளெல்லாம் அம்பாயபறந்திடுமாம்
ஆவாரங்கொத்ததனை அடையாளந்தான்புடித்தான்
கணையரழிமோதிரத்தை கண்டுமேதானெத்தான்
எடுத்துமேநல்லதம்பி இயல்காகத்தனினைப்பான்
இந்தவழியிலேதானே யிவளுமிருக்கவேண்டும்
என்றுமேகுதிரைவிட்டான் இன்பமாய்நல்லதம்பி
தூதிரைவிடும்போது கொற்றவனுமேதுசொல்லுவான்
மாடுபேமகீர்த்தம்பியரே மாட்டாஞ்சிறுபாலகரே
என்பிறப்புதங்கையவ ளிங்குவரக்கண்டதுண்டோ
ஏழுபிள்ளைநல்லதங்கா ளிங்குவரக்கண்டதுண்டோ
அப்போதுமரட்டிடையர் அறியவெடுத்துரைப்பார்
வந்தாளிருந்தாளையா வழிமார்க்கம்போனாளையா
உங்குலமென்றறியோம் உடன்பிறவியென்றறியோம்
இருட்டுகிணரொன்று ஏந்திழையங்கேட்டாளே
காட்டிக்கொடுத்தோமையா காரிழையாள்நாயகிக்கு
அப்படிச்சொல்லுகையில் அன்பானநல்லதம்பி
நீங்கள் காட்டிக்கொடுக்கலாமா கடக்கப்போய்நிற்கலாமா
பார்த்துமிருந்தீர்களாபழிகரப்பாவிகளா
எனக்குப்பிறப்பொழிய எனக்குட்பிறப்பலவோ
என்றுமேநல்லதம்பி இயலாகத்தானடந்தான்
காடுஞ்செடிகளெல்லாம் கணக்கவேதேடிவாரேன்
ஆறுசுனைகளெல்லாம் அங்கங்கேதேடிவாறன்
குட்டைகுளம்கண்டாலே குதித்திறங்கிதேடிவாறன்
துறவுகளைக்கண்டலே துள்ளிகுதிதிடுவான்
தூரையிலிப்படித்தேடிவருகின்றவேளையிலே
நல்லதங்காள் விழுந்தகிணற்றின்மூகனேவந்தான்
பாலூட்டும்பாலாடை பாவையடயாளம்
மல்லியங்கண்டானே மன்னந்தநல்லதம்பி

நல்லதங்காள் கிணற்றில் விழுந்திறந்ததைக்கண்டு
நல்லதம்பி பரதவித்தல்,

அப்போ பாழுங்கிணற்றருகே பார்த்துவயரெறிந்தான்
இருண்டகிணற்றருகே யேங்கிமனந்தளர்ந்தான்

தங்கைதங்கைபெறல்லவோ தறையிற்புரண்டழுகான
அம்மாடியெனறல்லவோ அடித்துப்புரண்டழுதாள்
முத்துப்போல்கண்ணீரை பக்கமெல்லாஞ்சோரவிட்டு
பவளம்போல் கண்ணீரை பக்கமெல்லாஞ்சோரவிட்டான்
பம்பைமயிரையெல்லாம் பாழ்கிணற்றிற்பிச்செறிந்தான்
ஐயோசிவனேஎன்று அடித்துப்புரண்டழுகரன்
ஓடிக்குதித்தானே உத்தமியாள்கங்கையிலே
தாண்டிகுதித்தானே தயவானக்கங்கையிலே
உடற்பிறந்தாள்பிள்ளையெல்லா ஓடியெடுக்கலுற்றான்
தங்கையைமெல்லவல்லோயைத்தாவியெடுத்தானே
வாரியெடுத்துவைத்து வண்ணமடிமேலே
முகத்தோடேமுகமனைத்து முத்தமிட்டுக்கொண்டானே
செத்தப்பிணத்துக்குச்சீரிட்டுப்பாத்தழுதான்
மாண்டபிணத்துக் வரிசையிட்டுப்பார்த்தழுதான்
நாவற்பழமோதன் கொம்பினையாள்பெற்றபிள்ளை
கோவைப்பழமோதன்கொம்பினையாள்பெற்றபிள்ளை
கையொத்தபாலகண்டி கண்ணுட்டிபெற்றபிள்ளை
ஈச்சம்பழமோதான் என்னுச்சிபெற்றபிள்ளை
கைகேற்றபாலகண்டி கண்ணுட்டிபெறற செல்வம்
என்றுநல்லதம்பி இயலாகத்தானுமப்போ

நல்லதம்பி நல்லதங்காளையும்பிள்ளைகளையும்
தகனஞ்செய்தல்

தங்கையைத்தானெடுத்து தகனஞ்செய்யவேணுமென்று
ஊதாரிதன்னுலே உடற்பிறப்புநானிழைத்தேன்
மாபாவிதன்னுலே மருமகனைநானிழைத்தேன்
பெண்சாதிதன்னுலே பெண்பிறப்பேநானிழைத்தேன்
ஊரில்நெருபெடுத்தா லுலகோர்சிரிப்பாரென்று
நாட்டில்விறகுகொண்டல் நல்லோர்சிரிப்பாரோ
சந்தனகட்டைகொண்டு சதுராய்பிளந்தடுக்கி
குங்குமக்கட்டைகொண்டு குளிரப்பிளந்தடுக்கி
சந்தனக்கட்டையிலே தங்கையரைதான்வளர்த்தி
குங்குமக்கட்டையிலே குழந்தைகளைத்தான் வளர்த்தி
வரப்போரிநெல்லதலே வாய்ககரிசிபோட்டானங்கே
செண்பகமாலே சிவமாலைவைத்திடுமாம்

மல்லிகைமாலை கொண்டு மன்னனலங்கரித்து
சுற்றிவந்துகொள்ளிதனை வைத்தானேகோதையர்கு
வலம்வந்தழுதகொள்ளி வைத்தானேநல்லதம்பி
நெருப்பும்பிடிக்கவில்லை நீறப்ச்சமைக்கவில்லை
அக்கினியும்பற்றவில்லை அனலாய்ச்சமையவில்லை
எண்டியம்மாதங்கையரே இத்தனைகோபமென்ன
ஏன்மேலே கோபமது வைக்கதென்பிறப்பே
பற்றியெறிந்தாயானால் பழிகளேவாங்கிடுவேன்
ஓங்கியெறிந்தாயானால் உயிர்களேவாங்கிடுவேன்
நாலுசரிபகலுக்கு நான்வாரேன்தங்கையரே
இப்படிச்சொல்லியண்ணன் இரண்டடி தானடந்தான்
நடந்தவன்போனபின்பு நாயகியாளக்கினிதான்
குப்பென்றுதானெழுந்து தொழுந்துவிட்டெரிந்திடுமம்
இப்படியாகஇருக்கின்றவேளையிலே

நல்லதம்பி நல்லதங்காளைத் தகனஞ்செய்து
வீடுவந்து சேர்தல்.

நல்ல தம்பியப்பொழுது நலமாகதனமனையில்
எட்டுநாள்துக்கமன்னன் இடல்பாய்சிறைகாத்து
அருகுபொறுக்கியண்ணன் அலரத்தலைமுழுகி
முக்காட்டையிட்டுராஜன் மூலையிலேபோய்படுதான
அப்போ-மூளியலங்காரி மூதேவி சண்டாளி
தன்னுடையபத்தினிபாள் தன்னெதிரேவந்துநின்று
ஆளன்முகம்நோக்கி ஆணழகியேதுசொல்வாள்
ஏண்காணும் ராஜமன்ன எந்தன்மேற்கோபமென்ன
பொல்லாததங்கையவள் போனலுப்போய்ப்போருள்
ஆகாதநல்லதங்கா ளவற்போனற்போய்ப்போருள்
நீ-காலின்மிதியடியைக்கழற்றிவைக்கலாகாதோ
கொண்டுவந்தவேட்டைகளைக்கூறிடவுமாகாதே
அப்போதுநல்லதம்பி ஆளனெடுத்துரைப்பான்
எனக்கும் உனக்கும் பெண்ணே எட்டுமாதவிரதமுண்டு
என்-வருத்தந்துலைந்தாலேமாதேநானுண்டிடுவேன்
உனக்குமெனக்குபெண்ணே ஒருபிள்ளையுண்டலவோ
நம்முடையபிள்ளைக்கு நலமாகவிப்பொழுது
கலியாணஞ்செய்யவேண்டும் கண்குளிரபார்க்கவேணும்
கண்ணுள்ளபோதே பெண்ணே கன்காட்சிகாணவேண்டும்

என்று-முளியலங்காரி முதேவிசண்டாளி
மன்னவனுநல்லதம்பி மர்மமதொடுத்தானே
கலியாணகாரியத்தைக் கடுகவே செய்யவென்று

நல்லதம்பி பிள்ளைக்குகலியாணஞ்செய்ய
பந்தலலங்கரித்தது.

சாந்தால்தரைமெழுகி சந்தனதால் கோலமிட்டு
கரும்பாலே கால் நிருத்தி அரும்பாலே பந்தலிட்டார்
முத்தைப்பிளந்து முகூர்த்தக்கால் சொப்பனிட்டார்
பவளமதைப்பிளந்து பந்தற்காலலங்கரித்து
தேக்குமரமபிளந்து தெருவெல்லாம் பந்தலிட்டார்
வாழைமரம்பிளந்து வாசற்காலலங்கரித்தார்
இட்டார்கள் பந்தலுகே இருநூற்றுங்காதவழி
தொட்டார்கள் பந்தலுகே தொண்ணூற்றுக்காதவழி
ஓலையால் பந்தலல்லோ உத்தமர்க்குதானுமிட்டார்
நல்லதம்பிசேனைகட்கு நலமாகபந்தலிட்டார்
தன்னுடைய சேனைகட்குத் தகுமானபந்தலிட்டார்
அப்போறுநல்லதம்பி ஆணழகனேதுசொல்வான்
கல்தச்சரையழைத்துக் கட்டழகனேதுசொல்வான்
தச்சர்களே தச்சர்களே தகுமானதச்சர்களே
என்வார்த்தைகேளுங்க ளெனக்கிசைந்ததச்சர்களே
முளியலங்காரி முதேவிசண்டாளி
எந்தனுடன்பிறந்த எனக்கிளையாள் நல்லதங்காள்
எழுபிளைநல்லதங்கா ளென்வீடுவந்தவிடத்தில்
பசித்தமுகம்பார்த்து பாலடைபபால்வாரத்தால்
கனத்தமுகம்பார்த்து கரண்டிப்பால் வாரத்தால்
என்தங்கைநல்லதங்கா ளெந்திழையுங்கோபமாகி
கோபம் பொருக்காமல் கொமபனையுந்தானடந்து
பிள்ளைகளுந்தானுமாக போய்குதித்தாள் பொய்கையிலே
மக்களுந்தானுமாக மாண்டாளென பெருந்துரவில
அப்படிசெய்ததொரு அரும்பாவியெனமனையாள்
என்மனையாள்சேனைகட்கு இடிபந்தல் போடுமென்றான்
கற்பந்தல்போட்டு கவிழ்த்துவிடு சேனைகளே
அந்தவுரைகேட்டு அழகுள்ளதச்சரெல்லாம்
அரும்பாவிசேனைகட்கு அழகுபந்தல் சொப்பனிட்டார்

பெரும்பாவிசேனைகட்கு பலத்தகல்லாற்பங்தலிட்டார்
மூளியலங்காரிமுதேவி பங்துகட்கு
ஆணழகனல்லதம்பி அனர்த்தம்வரபந்தலிட்டான்
சூத்திரப்பந்தல் சுழற்பந்தல் தானுமிட்டான
கல்லாலேபந்தலது கலகமவரத்தானுமிட்டான
தனனுடையசேனைகட்கு தெனனிலைப்பந்தலிட்டான
பந்தலிட்டபிற்பாடு பார்மன்னனோடுரைப்பான்
மன்னவனல்லதம்பி மம்மமா எதுரைப்பான்
மூளியலங்காரி முதேவிநாயகிக்கு
படிப்பாவிநாயகிக்கு பட்சமாயேதுரைப்பான்
உங்களமனிதருக்கு உகந்துநீபாக்கனுப்பு
எங்களமனிதருக்கு யான்பாக்கனுப்புகிறேன்
என்றுறைத்தநல்லதம்பி எல்லோர்க்கும்பாக்குவைத்தான
கப்பல்கடந்துகடலேறிபாக்குவைத்தான்
வம்றிகிடந்ததொருவாகானகாவேரி
காவேரிநிரம்பியங்கே கரைபுரண்டுவந்ததுபோல்
பூரித்திருதாளும் பொன்னுபரணமின்ன
மாட்டினமேல்பாக்குமங்கே மனிதருக்கு போகவிட்டான்
சின்னமடிகோலி சீமையெங்கும் பாக்குவைத்தான்
பெரியமடிகோலி பூமியெங்கும்பாக்குவைத்தான்
கலியாணமென்றுசொல்லிக் கடலேறிபாக்குவைத்தான்
இப்படியாகப்பாக்கு இன்பமாய்வைத்தபின்பு
தன்னுடைசேனைகட்கு தாம்பூலம்வைத்தபின்பு
மூளியலங்காரி முதேவிசண்டாளி
ஜாதிஜனங்களுக்கு தனபபாக்குதானளித்தாள்
மூளிபலங்காரி முதேவிசண்டாளி

நல்லதம்பி ஓலையெழுதியனுப்புதல்

ஆணழகுமன்னன் அறிவுள்ளநல்லதம்பி
எனனவென்றுசொல்லி எழுதுவாரோலையிலே
என்பிள்ளைதம்பிபற்கு இவ்வாகவிப்பொழுது
சித்திரைமாதத்திலேபத்தாந்தேதியிலே
வெள்ளிகிழமையிலே வெடியஸ்தநாழிகையில்
பகல்முகூர்த்தமென்றுசொல்லி பாங்காரோலையிலே

மூளியலங்காரி மூதேவிசேனையெல்லாம்
அனைவருந்தாமறிய அவ்வேலோலை யெழுதினானே
கலியாணஓலைதன்னைக் கடுகவேயெழுதினானே
அப்போ-மன்னவனுர்நல்லதம்பி மர்மமா எழுதுகிறான்
அவ்வேடுவிட்டு மறுவேடுதானெடுத்து
என்தங்கை நல்லதங்காள் இளங்கொடியாள் ராயகியும்
கூடப்பிறந்த குலப்பெண்ணு மென்தங்கை
தங்கையும்பெற்றெடுத்த தனஞ்செயர்களேழுபேரும்
பங்குனிமாதத்திலே பதின்மூன்றுந்தேதியிலே
வியாழக்கிழமையிலே விடிந்தைந்துநாழிகையில்
பாழுங்கிணறுதனில் பத்தினியும் பிள்ளைகளும்
விழுந்துபிறந்தார்கள் விதியினிடகாரணத்தால்.
செத்துமடிந்தார்கள் சிவலோகஞ்சேர்ந்தார்கள்
மாண்டுமடிந்தார்கள் வைகுந்தஞ்சேர்ந்தார்கள்
அருமபாவி தன்னுலேயரனபாதஞ்சேர்ந்தார்கள்
கொடும்பாவிதனனுலே கொம்பனேயாள் தானிறந்தாள்
மாண்டுமடிந்தசேதி வையகத்தார்தாமறிய
செத்துமடிந்தசேதி சீமையுள்ளார் தாமறிய
ஓலையெழுதினானே உத்தமிசிகாமணியும்
மாண்டுமடிந்தாரென்று மன்னனுக்கெழுதினானே
ஓலையெழுதியல்லோ வுவந்துகுறியுமிட்டு
இறந்தஓலைதானெழுதி இருபக்கம் சுட்டெறிந்து
இருஓலைதனனையு மிசைவாகதானெடுத்து
தூதுவனைத்தானழைத்து சுருக்காயெடுத்துரைபபான
ஓலைச்சுருள்கொடுத்துஉத்தமனுமேதுசொல்வான்
மூளியலங்காரி மூதேவிசேனைகட்கு
கலியாணஓலைதனைக் கடுகவேகொண்டுசொல்லும்
என்றுமேநல்லதம்பி இன்பமாய்த்தான்கொடுத்து
கலியாணஓலைதன்னைக்கையிற்கொடுத்தபின்பு
தூதுவரனைவாக்கும் சுருக்காயெடுத்துரைபபான
எந்தனதுசேனைகட்கு இறந்தஓலைகொண்டுசொல்லும்
என்றுமேநல்லதம்பி இசைவாகத்தான்கொடுத்தான்
கொடுத்ததைதான்வாங்கி கொப்பெனவேதானடக்க

அரசன்சொல்கட்டவாமல் அப்பொழுதேபோகலுற்றார்
மூளியலங்காரி மூதேவிபந்துகட்கும்
நல்லதம்பிதன்னுடைய நலமுள்ளபந்துகட்கும்
ஓலையைத்தான்கொடுத்து உத்தமருகவந்துவிட்டார்
இப்படியாக இருக்கின்றவேளையிலே
இருதிறத்துசேனைகளும் இங்கேபயணமென்றார்
மூளியலங்காரி மூதேவிசேனையர்கள்
வருகின்றசந்தோஷமட்டுமிதங்களில்லே
பார்க்கமுடியாது பாரிலிடங்கொள்ளாது
சாணமுடியாது கட்டுரைக்கலாகாது
வீரர்கள் தங்கக்கிரீடமும் தார்வேந்தர்தன்னழகும்
முத்துக்கிரீடமும் முடிமன்னர்சீரழகும்
பவளக்கிரீடமும் பார்மன்னர்தேரழகும்
உத்தரியந்தான்புரள உத்தமர்கள்வாராரே
தேரேறிமன்னரெல்லாம் தெருவீதிவாராரே
ஆனையேறிமன்னரெல்லாம் அசைந்துமேவாராரே
கொண்டைமுடியுடனேகொண்டைதாங்கிப்பூவுடனே
அவர்களதுதேவிகளும் அநேகம்பேர்தாகிகளும்
மஞ்சள்குளிப்புடனே மையுடனேபொட்டுடனே
அபாங்கிமாரெல்லவரும் பல்லக்குந்தாங்கிவர
வந்துநிறைந்தாராம் வரசலிடங்கொள்ளமல்
பந்தியாயுட்கார்ந்தார் பந்தலிடங்கொளளாமல்
இவளுடையசேனைகள் இப்படியாயிருக்க
ஆணழகநல்லதம்பி அவனுடையசேனைக்கு
இவனுடையமனிதருக்கு இறந்தஓலைவந்தபின்பு
ஓலைச்சுருள்மடிக்க உடன்பிரித்துபார்த்தார்கள்
சர்மக்கருங்குழலாள் நல்லதங்காள்மாண்டாளென்று
நாமமுடியழகன் நல்லதம்பிராசாவின்
சேனைகளதனையுஞ் சேர்ந்துமிகவழுதார்
முட்டியழுதார்கள்முகத்திலறைந்துகொண்டு
அவரவர்கடகக்கையாலடித்துக்கொண்டுதானழுதார்
மாரிலறைந்துகொண்டு மண்மேற்புரண்டழுதார்
போப்பார்ப்போமென்றுசொல்லி புண்ணியர்கள்வாராக்கள்
கண்டுவருவோமென்று காரிழைமார்வாராக்கள்

வாடிமுகந்தளர்ந்து வண்ணமுகம்வேறுபட்டு
ஓலைப்புங்கூலைப்புமாக எல்லோரும்வாராக்கள்
அலைகுலையத்தலைகுலைய அனைவோரும்வாரார்கள்
வந்துமேலுள் நுழைந்தார்வாசலிடங்கொளளாமல்
கோர்த்திபாய்சமைந்திருகதும் சூத்திரப்பந்தலின்கீழ்
சூத்திரப்பந்தலின்கீழ் சூழ்ந்துநிறைந்தாகள்
நல்லதம்பி பிள்ளை தாலி தரித்தல்
இப்படியாக இருக்கின்றவேளையிலே
நல்லதம்பிபெற்றெடுத்த நாமமுடியானை
சீயக்காய்நெல்லி சிறுபயறுகஸ்தூரி
வாசனைவர்க்கமுடன் வகைவகையாய்க்கொண்டுவந்து
மணவரையினமேலாக மாப்பிளளையைகுந்தவைத்து
மாப்பிள்ளைபெண்ணுக்கு மணவரையிவல் நலங்குமிட்டார்
சீக்கைக்கழித்தார்கள் சீராயிருவருக்கும்
ஸ்நானங்கள்செய்துவைத்தார் நாமமுடியார்கள்
ஈரத்துகில்களைந்து இழைசேர்ந்தபட்டுடுத்தி
நனைந்ததுகில்களைந்து நாகரீகபட்டுடுத்தி
சிவாசிவாவென்றுசொல்லி திருநீற்றுக்க ப்புமிட்டான்
மாப்பின்னையை கொண்டு வந்துமன்னரலங்கரித்தார்
அநேகவிதபூஷணத்தாலலங்கரித்தான்பின்பு
பொற்கொடிமாரெல்லோரும் பெண்ணையலங்கரித்தார்
இருவரையும்கொண்டுவந்து இன்பமுள்ளபந்தலிலே
மணவரையின்முன்பாக மன்னவரைகுந்தவைத்து
அரசாணிமுன்பாக ஆளனைக்குந்தவைத்து
முன்னூறுபார்ப்பார்கள் முகூர்த்தமிட்டமங்கிலியம்
நானூறுபார்ப்பார்கள் நாளிட்டமங்கிலியம்
அம்மிவலமாக அரசாணிமுன்பாக
கட்டுங்கள்தாலி கழுத்திலே என்றுரைத்தார்
அப்போது ஆணழகளப்படியே கட்டலுற்றான்
என்னவென்று சொல்லி திருக்கழுத்தில் சூட்டினானே
அரகராவென்றுசொல்லி அழுத்தினான்மங்கிலியம்
பிரமமுடிமுன்றுமுடி போட்டான்பிற்பாடு
அங்கிருந்தமன்னரெல்லாம் அழகுபட்டங்கட்டினார்கள்
அம்மான்மாரெல்லோரும் அடங்கலும்பட்டமிட்டார்
நல்லதம்பிபெற்றெடுத்த நவமணியுமேதுரைப்பான்

என்-ஐயாவேஐயாவே அடியேனெருவார்த்தை
உம்மூடன் தான்பிறந்த உத்தமியாள்நல்லதங்காள்
அவளுமொருசீமையாளுகிறுளென்றீரே
அவள்பேரைச்சொல்லி அழகுபட்டங்கட்டுமென்றுன்
அத்தைபேரைச்சொல்லி அணியவேவேண்டுமென்றுன்
அத்தையின்பேருரைக்க ஆணழகன் வயிரெரிந்து
பொன்னின்குடமே என்பூபாலராஜாவே
அத்தையைகொன்றவள் தானரும்பாவியுனதாயார்
மாமியைகொனறமாபாவியுனதாயார
எனறு அதிகவயிறெரிந்து அப்போதுநல்லதம்பி
வ[illegible]யுருவிமன்னவனும்தானேழுந்தான்
தகப்பனிடகோபத்தைத் தார்வேந்தன்தான்பார்த்து
அண்ணுவே அண்ணுவே அதிகோபங்கொள்ளாதே
கலியாணவாசலிலே கலக்கங்கள்வைக்காதே
இங்குவைத்தசூத்திறங்களெனக்குதெரியவரும்
அதற்குமேசூத்திரங்களறிவேன்காணைனதகப்பா
இன்னமொருநாழிகையிலங்கேதெரியுதுபார்
மூளியலங்காரி முதேவிசேனையெல்லாம்
அவளுடையசேனையெல்லாம் அதமாகபோருதுபார்
[illegible]தாவின்சேனையெல்லாம்மாண்டுமடியுதுபார்
அருப்பாவிசேனையெல்லாம் அடியோடேமாளுதுபார்
மாபாவிசேனையெல்லாம் மாண்டுமடியுதுபார்
பதராதே பதராதே பதருமுள்ளயென்தகப்பா
பொறும்பொறுமென்று பொன்னடிக்குதெண்டனிட்டான்
அப்போ-ஆறினுன்கோபம் அமர்ந்தான்கொலுதனிலே
கலியாணசட்டங்குகள் கடகழுடிந்தவுடன்
மூளியலங்காரி முதேவிநாயகிக்கு
மன்னவனுர்நல்லதம்பி மர்மமா எடுத்துரைப்பான்
உங்கள் மனிதருக்கு உண்ணவேபடைப்பாய்
எங்களமனிதருக்குபான்படைப்பேன்சாதங்கறி
தன்கணவன் சொன்னபடி சம்மதித்தாளமுதேவி
அப்போதுபந்திகள்யம்மந்திருப்பந்தலிலே
முதேவிசேனைகள் முடிமன்னரதனையும்
சூத்திரப்பந்தலின்கீழ் சூழ்ந்திருந்தாரெல்லோரும்

நல்லதம்பிசேனையெல்லாம் நலமானபந்தலிலே
பக்கம்கொலுவிருந்து பத்தியமாந்தர்கள்
வரிசைவரிசையாகவந்தவர்கிலேப்போட்டார்
வாழையிலைபோட்டு வட்டித்தார்சாதங்கரி
இவளுடையசேனைக்கும் இவள்பரிமாறிவாருள்
நல்லதம்பிசேனைக்கு தங்கையவளேதுசொல்வாள்
வஞ்சனையாகவல்லோ வட்டித்தவாராளை
லகரிசிசாதமது வட்டித்தாளப்பொழுது
அகத்திகீரைகுழம்புதனை அள்ளியவள்வார்த்து
வஞ்சனைசெய்தமல்லோ வாருளலங்காரி
தங்களிடசேனைக்குத் தகுந்தபடியேதுசெய்தாள்
குத்துபருப்புமிட்டாள் கூசாமல் நெய்சொரிந்தாள்
அள்ளிபருப்புமிட்டாள் அதுகொண்டுநெய்வார்த்தாள்
பத்துவிதக்கரியும்பதினெட்டுபச்சடியும்
எட்டுவிதக்கரியும் இயலானபச்சடியும்
சுத்திகறியும்வைத்துசொம்புதயிர்முன்னேவைத்தாள்
உண்ணுங்சுளென்றுசொல்லி உபசரணைசெய்திருந்தாள்
நல்லதம்பி சேனைகட்கு நடக்குதயிந்தவிதம்
அப்போ-முளியலங்காரி முதேவிநாயகிக்கும்
தன்னுடைய சேனைகட்கு தான்பறிமாரிவாராள்
பாவையுடசேனையெல்லாம் பந்தியமர்ந்தார்கள்
அந்நல்லவேளையிலே அங்கிருந்தசேனைபர்கள்
ஆகாதற்குறிகள் அட்சணமேகண்டார்கள்
இருக்கின்றமன்னருக்கு இடதுதோள் துடித்திடுமாம்
வந்திருந்தமங்கையற்கு வலக்கண் துடித்திடுமாம
வைத்திருந்தசாதங்கரி ரத்தகவுலடிக்கும்
உற்றபதார்த்தவகை உதிரகவுலடிக்கும்
அங்கிருந்தசேனையெல்லாமவர்களுமேதுசொல்வார்
அப்போதுசேனையர்களடங்கலுமேதுசொல்வார்
என்னமோஏதோ இடிவந்துசேர்ந்திடுமோ
மர்ளாபழிசமக்கு மீளாமல்வந்திடுமோ
தீராப்பழிசமக்குச் சேரவேவந்திடுமோ
என்றுசொல்லிமனனவர்களேங்கிமனந்தளர்ந்து
சிந்தைகலங்கியவர் திடுக்கிட்டுமெய்மறந்து
என்னமோ ஏதோவென்று இருக்கின்றவேளையிலே

மூளியலங்காரிமுதேவி சண்டாளி
நல்லதம்பி சேனைகட்கு நன்முய்படைத்துவாழுள்
அகத்திகீரைகுழம்பு அடைவாசதான்வைத்தாள்
உண்ணுங்களென்றுசொல்லி உபசரணைசெய்துவாராள்
சர்தமும்கீரைநல்ல தம்பிசேனை உண்ணுகிறூர்
மூளியுடசேனையெல்லாம் மூப்பழமூஞ்சோறுமாக
முன்சோறுவண்டுமல்லோ பின்சோறெடுக்கும்போது

நல்லதம்பி ஆசாரியைகண்டு மூளியலங்காரி
சேனையின்பேரில் சிழற்பந்தலைத்தட்டி

மடியவைத்தல்

அப்போதுநல்லதம்பி ஆசாரிக்கெடுத்துரைப்பான்
அண்ணுடா அண்ணுடா ஆசாரி அண்ணுடா
ஆர்காணுமாசாரி அறியவொருவார்த்தை
மூளியுடசேனையெல்லாமுழுதுமடிவதற்கு
அவதானப்பந்தலை அடுக்காகதட்டிவிடும்
போய் நீ தட்டி விடும் புத்தியுள்ள ஆசாரி
பந்தலின்கூஸ்த்திரத்தைப் பார்த்துவிடுமாசாரி
என்றுசொல்லிநல்லதம்பி எடுத்துவிட்டானுசாரி
தந்திரமாய்ப்பந்தலையும் தட்டிவிட்டானுசாரி
அவதானபந்தலை அங்கேதட்டிவிட்டானே
மூளியுடசேனையெல்லாம் முறிந்துமடியுதங்கே
அப்போ-மூளியலங்காரிமுதேவிசண்டாளி
முதேவிசண்டாளி மூலையிலேபோய்சேர்ந்தாள்
கையைமுறித்துகொண்டு கதவண்டைபோய்சேர்ந்தாள்
என்னசெய்யபோறேனென்று ஏங்கியழுகலுற்றுள்
ஒற்றைகுரலிட்டு ஒங்கியழுகலுற்றுள்
மாபாவி சீமையிலே மனனர்களேதோற்றுவிட்டாள
பெரும்பாவிசீமையிலே பெண்டுகளேத்தோற்றுவிட்டேன்
ஒருகோடிகும்பிழந்து ஒற்றைற்காலாகிவிட்டேன்
இருகோடிகும்பிழந்து இருந்தேனொருபாவி
சூதுசெய்து கொன்றேனே துரோகியவனென்கணவன்
கல்லாலே பந்தலிட்டுக் காளைகளேகொன்றுவிடடான்
ஒருத்திவந்துளமுழைந்து ஒருகோடிகும்பிழந்தேன்

என்றுமுளியல்ங்காரி முதேவி சண்டாளி
நின்றுபுலம்புகையில் கண்டானேராஜமன்னன்
ஆணழகன்நல்லதப்பி அலங்காரிக்கெடுத்துரைப்பான்
பத்துபேரைகொன்றபழிகாரிக்கெடுத்துரைப்பான்
எட்டுபேரைகொன்ற இழிகுலத்திவாடிபென்று
என்னென்னபக்குவம் இளங்கொடிக்குசெய்பலுற்றான்
முன்சிகையைத்தான்பிடித்து நல்லமணபந்தலிலே
முக்குஸ்தனமறுத்தான் மூத்துமுடிப்பந்தலிலே
கொண்டையறுத்தான் கொத்தோடே தொங்கவிட்டாள்
காதையறுத்தானங்கே கழுத்திலே தொங்கவிட்டான்
கண்ணேபிடுங்கியங்கே எண்ணேயைபூற்றிவைத்தான
இனனமுமநல்லதம்பி ஏதேறுசெய்யலுற்றான
கழுதையைகொண்டுவந்து கட்டழகிமுளியரை
கழுத்திலெருகமாலைகனமாகசூட்டிவிட்டான
கழுதைமேலேறவைத்து கைகொட்டிதாசைத்தான
சேவகரைதானழைத்து தெருவிலிழுங்களென்றான
கழுதையைக்கைபிடித்துக் கடுகியிழுங்களென்றான்
அழகுள்ளவீதியெல்லாம் அங்ஙங்கேசுற்றுமென்றான்
நாலுத்தெருவிலே நாரியவள் கோலம்வந்தாள்
மூன்றுத்தெருவிலே முதேவிகோலம்வந்தாள்
நாலுகோலம்வந்தபின்பு நல்லகம்பியேதுசெய்தான்
முளியலங்காரி முதேவிதோஷிபரை
சுண்ணும்புகால்வாயில் சுட்டானே சுந்தரியை
சுட்டானே சுந்தரியை சுகமானநல்லதம்பி
இப்படியாகயிருக்கினறவேளையிலே
மனையாளேசுட்டெரிந்த மற்றுநாளகாசிராஜன
மச்சானவரவை மனனவனும் பார்த்திருந்தான
நல்லதங்காள நாயகனும் நற்காலந்தானபிறந்து
காசிராஜனுக்கு காலதெளிந்துதங்கே
காலமது தெளிந்துகனத்தமழைபொழிந்து
சீமையதுதெளிந்து செழித்துமழைபொழிந்து
மூப்போகந்தானவளைந்து முபற்சிளளசீமையிலே
காலந்தெளிந்தது கம்பு விளைந்தது
சீமைசெழித்தது செலவமழைபெய்தது

காடுசெழித்தது கல்லமழைபேய்ந்தது
கருப்புகளிந்தபினபு காசிராஜனேதுசெய்தான
தாய்வீடுபோனபெண்ணை தானழைக்கவேணுமென்று
நல்லதங்காள் நாயகியை நாயகனழைக்கவென்று
செட்டிகடைக்குவந்தான பட்டைவிலைபேசித்தான்
பாரியவளேரிவர பல்லக்குகொண்டுவாரான
புத்திரர்களேறிவர பொன்கரடிகொண்டுவாரான்
பலபலகணிவகைகள் பாலருக்குகொண்டுவாரான்
சிறுமுடைகொண்டுமன்னன் சிறுசதங்கைகொண்டுவாரான்
தாய்வீடுபோனபெண்ணைத்தாழைக்கவாரானே
குதிரைபரிவாரம் கோடிதளம்முனனடக்க
ஆனை பரிவாரம அடங்கலும்பினனடக்க
கவி ஞர்கவிபாடக் கட்டியங்கள்கூறிவர
ஆனையு ஞ்சேனையும் அத்தனையுமுனனடக்க
எக்காளோனூத இடிபாணந்தானமுழங்க
காகசுரமுதகவிரிகற்தொம்பூத
பேரிகைகொட்டிவரப் பெரியசினனமுதிவர
கத்திகட்டுஞ்சேவகரும் காவலரும்முனனடக்க
வந்துநிறைத்தாகஞ் வாசலிடங்கொள்ளாமல்
நல்லதம்பிக்குக்காசி ராடனெடுத்துரைபபான
மைந்தனேனை தைத்துனனே மனையாட்டியெங்கே எனறுன
எலுமிச்சம்வர்ணமாட பிளங்கொடியாளெங்கேயெனறுன
பவளநிறமுடையபத்தினியாளெங்கேயெனறுன
எனறகாசிராஜனுக்கு எடுத்துரைப்பான நல்லதம்பி
அருந்தங்கைசெத்தமைச்சான் அழிகைகளாச்சுதப்பா
அப்போதுகாசிராஜன அடவாகபேசுசொல்வான
பெண்சாதி போனறும் போனறுள் பிளளைகளெங்கேயப்பா
அப்போதுநல்லதமபிபரிசு எடுத்துரைப்பான
சேய்தானிரந்துபோய் சேனனளாச்சுதப்பா
அப்போதுமனனவனுப் மைத்துனனுக்கேதுசொல்வான
ஒனறிரண்டுமாண்டானுப் உலகத்திலுளபடி
ஏழுபிள்ளை மாணடுவிதம் எனகுகரியசொல்லுமெனறுன
அந்தவுரைகேட்டு ஆனமுகனல்லதம்பி
மாமமொளியாமல் மைத்துனர்கேதுசெரல்வான
வந்தாளெல்லதங்கள் மக்களுந்தானுமாக
காட்டிலேகண்டுநான் வீட்டுக்குபோங்களெனறான
எந்தனுரைப்படியே பிளங்சொடியாள்வீடுவந்தாள்

புத்திரருந்தானுமாகப் பொற்கொடியாள் வந்தாளென்றுன்
மூளியலங்காரி மூதேவிசண்டாளி
செய்தகொடுமையாலேசெல்வவதிபிள்ளைகளும்
கோபப்பொறுக்காகமல் குதித்தார்கள்பெரும்பையிலே
அந்தவிசேஷம் அறிந்துநானேடிவந்து
மாண்டவரைத்தானெடுத்து மயானச்சுடலையிலே
மூளியலங்காரி மூதேவிசேஷகளை
தங்கைப்பழிக்காகத்தகுந்தபழிவாங்கிவிட்டேன்
மக்கள்பழிக்காக மனையாளைக்கொன்றுவிட்டேன்
நானிறந்துமடியாமல் இருந்தேனுனக்காக
என்றவுரைகேட்டு ஏங்கிமனந்தளர்ந்து
பிள்ளைக்குகாஷியாய் பெண்கொண்டுவாராமல்
கலியாணம்செய்துநான் கண்குளிரப்பாராமல்
செல்வரைப்பார்க்கிலும்நான் சீமையாளப்போறேனை
மைந்தரைப்பார்க்கிலும்நான் மண்டலமாளுவேனை
என்றுமேகாசிராஜன் இனியில்லாக்கோபமுடன்
கட்டாரிகட்டுமவன் கடுகமடிந்தானே
அப்போதுநல்லதம்பி அதிகவீனமுடன்
தங்கைபைப்பார்க்கிலும்நான் தரணியாளப்போறேனை
மைத்துனனைப்பார்க்கிலும் நான்மண்டலமாளுவேனை
என்றுமவன்நல்லதம்பி இனியாருக்கோபமுடன்
கட்டாரிகட்டுமவன் கடுகமடிந்தானே
இந்தவிதமாக இவர்கள்மடிந்திருக்க

நல்லதங்காள் நல்லதம்பி காசிராஜன்வதுப்பிள்ளை
கள் இறந்திருப்பதைக்கண்டு பார்வதிபரம
சிவன்வந்து எழுப்புகின்றது.

பார்வதிதேவியற்குப் பார்க்கமுடியாதகவில்லை
பரமசிவனுக்கும் பார்க்கமுடியாதகவில்லை
ஈஸ்பரனுமீஸ்வரியும் இரக்கமுடன்தானெழுந்து
இடபவாகனமேறி இன்பமுடனப்பொழுது
கைலாசம்விட்டுமவர் கடுகப்பயணமதாய்
கப்பறையிற்றண்ணீர்கொண்டு கையில்பிரம்புகொண்டு
கையில்பிரம்பெடுத்து கப்பறையில் ஜலமெடுத்து
செத்தவர்கள்தன்மேலே சீராய்தெளிப்பதற்கு
பார்வதிதேவியரும் பரமசிவனுரும்
கைலாயம்விட்டல்லவோ கடுகவந்தாண்டி
ஆறுசுனைதாண்டி யாறுவனந்தாண்டி

இருண்டவனந்தாண்டி இவர்களும்வந்தார்கள்
பாழுங்கிணற்றருகே பரமசிவன்வந்து
இருண்டகிணற்றருகே ஈஸ்வரியும்நின்று
ஏழுப்பிள்ளைநல்லதங்காள் இறந்துகிடப்பவர்மேல்
தண்ணீரைத்தான்தெளித்து தட்டியெழுப்பினர்கள்
அப்போ தூங்கியெழுந்தவர்போல்சுகமாயெழுந்தார்கள்
ஏழுபிள்ளைநல்லதங்காள் எழுந்துமேதானும்வந்தாள்
மச்சானும்மச்சானும் அச்சமில்லாதெழுந்தார்கள்
ஏழுபிள்ளைதானுமப்போ எழுந்திருந்துவந்தார்கள்
அப்போதுநல்லதங்காள் அரிவையெடுத்துரைப்பான்
அரகராமகாதேவா அந்திவண்ணாபரசுபாணி
எனக்குள் நிறைந்துநின்ற ஏகபரஞ்சுடரே
என்தாயேபார்வதியே எனையாளவைத்தாயே
எங்களைஎழுப்பிவைத்த ஏகபராபரியே
உங்கள்தரிசனம்கண்டுள்ளமெல்லாம்பூரித்தோம்
எங்கட்குக்காட்சிதரயின்பமுடன்வருதீர்கள்
சரணம்சரணமென்று சாஷ்டாங்கமாய்ப்பணிய
ஐயனாரும் அம்மனும்போய்மறைந்தார்
இப்படியிருக்க இளங்கொடியாளேதுசொல்வாள்
பத்தாவேபத்தாவே பாராளும்பத்தாவே
உன்[illegible]க்கைகான்கேளாமல்பிழைமோசம்போனேனே
வார்த்தைநானுமுனக்குமல்வகைமோசம்போனேனே
பெண்புத்தியாலேயல்லோ பிழைமோசம்வந்ததென்றாள
தப்பாமல்வானம்பத்தா தலையிலிடித்துதங்கே
பேய்கொண்டபாவியைான்பிறப்பெல்லாநம்பிவந்தேன்
சண்டாளண்ணனைநான் கண்மென்றுநம்பிவந்தேன்
என்ஆசைகணவாநீ அன்பாளவார்த்தைகேளும்
என்னைப்போலபெண்சாதி இவ்வுலகிற்கிட்டாளோ
வேசிகிடையாளோ வெளளாட்டிகிடையாளோ
தாசிகிடையாளோ தகுமொருத்தியாகாளோ
நாட்டியப்பெண்களிலே நல்லபெண்கிட்டாளோ
மனையாட்டிமாண்டாளென்று மாளவிதிவுனக்கேன்
பெண்சாதிமாண்டாளென்ற பின்னேமடியலாமோ
எனக்காகநீமாண்டால் ஏசாதோயிவ்வுலகம்
நீ-மாண்டுமடிந்தாக்கால் மண்டலத்தாலென்னசொல்வார்
செத்துமடிந்தாக்கால் சீமையாளாரென்னசொல்வார்
எனக்காகவுன்னுயிரை ஏன்மாய்க்கவந்தீரப்போ
என்றுமேகணவனுக்கு இயல்பாகானுரைத்து
அண்ணாடா அண்ணாடா அண்ணியுடன்[illegible]தை
கேட்டீரோ அண்ணாவே கிளிமொழியாள்சொல்வாத்தை

மூளியலங்காரி மூதேவிசண்டாளி
அவளுடையதன்வார்த்தை அறியவேநீகேளும்
நான்வரும்சேதிதன்னை நாயகியாள்தான்கேட்டு
ஒடிக்கதவடைத்து ஒட்டிச்சுவர்மண்ணைறைந்தாள்
சாத்திகதவடைத்து சரியாகமண்ணைறைந்தாள்
பண்ணுதபாடெல்லாம் பாவிபடுத்திவிட்டாள்
அண்ணுடா அண்ணுடா ஆரணங்கையிப்பொழுது
ஆக்கினைசெய்யவேண்டாம் ஆழியில்வைக்கவேண்டாம்
இவளைக்கல்லிலெழுதவேணும்கண்காணநாட்டவேணும்
காரியுமிழவேணும் கண்டார் சிரிக்கவேணும்
என்றுமே நல்லதங்காள் இயலாகத்தானுறைக்க
அபோதுநல்லதம்பி ஆணழகனேதுசொல்வான்
எத்தன்பிறப்பே நீ இளங்கொடியாள் நல்லதங்காள்
திக்கற்றபாவியைப்போல் தெருவிலுருண்டாயோடி
தாயற்றபாவியைப்போல் தரையிலுருண்டோடி
இப்போ-நானுண்டசீமையெல்லாம் நீயாளவேணுமம்மா
நீயாண்டசீமையெல்லாம் நானுளவேணுமம்மா
என்றுமேநல்லதம்பி இன்பமாய்ச்சொல்லுகையில்
அந்தமொழிகேட்டு ஆரணங்கேதுரைப்பாள்
அண்ணுடா அண்ணுடா அழகுசிகாமணியே
செத்தோரிருந்தோமானால் சீமைக்கு ஆகாது
இப்போ-மூளியலங்காரி மூதேவி நாயகியை
பூமியில்வைக்கவேணும் போகிறவர்கள்பார்க்கவேணும்
கல்லிலெழுதவேணும் கடுகவே நாட்டவேணும்
காரியுமிழவேணும் கண்டார் நகைக்கவேணும்
என்றுமே தான்சொல்லி இன்பமாய் நல்லதங்காள்
அண்ணனைத்தான்பார்த்து அரிவையெடுத்துரைப்பாள
என்-அண்ணுவே அண்ணுவே அன்பாக நீர்கேளும்
ஆசாரிதன்னை நீ அதிகவிரைவுடனே
அழைதேதோடிவாருமென்று அரிவையெடுத்துரைப்பாள்
பட்டணதிற்கீர்த்தியுள்ள பரங்கிரியாசாரி
எனக்கு-கர்சியில் கோயிலொன்று கட்டிவையுமாசாரி
மாதமொருதிருநாள மகிழ்ச்சியாய்தானடத்தும்
வருஷம்ஒருதேருவரிசையாய்தானடத்தும்
என்றுசொல்லிநல்லதங்காள ஏந்திழையுமப்போது
நல்லதங்காள ஏழுபிள்ளை நாட்டுவன்னிமரமாவி
வன்னிமரங்கண்ணுகி மாசின்றிநிற்கிறார்கள
நீண்டதவரமளித்து நீ நிலத்தில்வாழ்ந்திருக்க
மச்சானும் மச்சானும் [illegible]தங்காளை
கண்டுமகிழ்ந்திருவர் கைலாசம்சேர்ந்தார்கள

52 12816







சடையிற்பிறயணிந்த சங்கரனர்தன்னருளால்
பாரிலுளள ஆடவரும் பாலகரும் ஆரியரும
நாரியருங்களிக்க நல்லதங்காள கதையை
திருவொற்றியூர டி. எஸ். ராமானுஜ அய்யங்காரால்
அஷ்டதிசைபுகழ அச்சிலிதைத்தானியற்றி
கற்றோரும் மற்றோரும்க ளிப்பாய் யடிப்பதற்கு
சொற்குற்ற மில்லாமல் சுத்தபிரதியதர்ய்
தப்புபிழைதிருத்தி தன்னுலியன்றமட்டும்
ஸ்ரீ ராமானுஜவிலாச அச்சுக்கூடத்திலிதை
நலமாகபதிப்பித்தார் நல்வருக்குந்தர்னுதவ
சிந்தனைகளில்லாமல் சீராய் படித்தவர்கள
ஆல்போற்றழைத்து அறுகுபோலவேறேடி
பல்போல்புசிக்க பாரில்மிகதான்வாழி
ஓங்கியநால்வேத முயிர்பலவுந்தான்வாழி
வாழிவாழியென்றுசொல்லி வரமளித்தாரீஸ்வரனார்

நல்லதங்காள் கதை

முற்றிற்று.